**2021ஆம் வருடம் ஜனவரி மாதம் 29.01.2021ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.Y. சுரேந்திரன், பி.இ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

**பொருள் : 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான நகர பேருந்து நிலைய பேருந்துகள் நுழைவு கட்டணம் மற்றும் ஷேர் ஆட்டோக்கள் சுங்க வசூல் குத்தகை இனத்திற்கு 2020–21 முதல் 2022–2023 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட 04.11.2020, 19.11.2020 மற்றும் 07.12.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ஒருவரும் செலுத்தவில்லை. 07.12.2020 அன்று மூன்றாவதாக நடைபெற்ற பொது ஏலத்தில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.பி.வீரா என்பவர் ரூ.4,25,100/–க்கும் திருமதி.பி.வெண்ணிலா என்பவர் ரூ.3,20,000/–க்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள். இத்தொகைகள் மூன்றாண்டு சராசரி மற்றும் சென்றாண்டு குத்தகை தொகையைவிட குறைவாக உள்ளது. தற்பொழுது துறைமூலம் வசூல் செய்யப்படுவதால் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ரசீது புத்தகம் அச்சடிப்பு செலவினம் கூடுதலாக ஆவதால் நகராட்சிக்கு நிதிஇழப்பு ஏற்படுவதை கருத்தில் கொண்டு திரு.பி.வீரா என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,25,100/–ஐ ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. திரு.பி.வீரா என்பவரது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,25,100/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2020–21 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி நகர பேருந்து நிலையம் பேருந்துகள் நுழைவு கட்டணம் தற்பொழுது துறை மூலம் பணியாளர்கள் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ரசீது புத்தகம் அச்சடிப்பு செலவினம் ஆண்டிற்கு சுமார் ரூ.8,50,000/– ஆகும் என வருவாய் ஆய்வர் குறிப்பினை ஏற்கலாம்.
4. நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் மூன்று முறை ஏலம் மற்று.ம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதை கருதியும், பேருந்து நிலைய நுழைவு கட்டணப் பணிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் அவர் தம் உரிய பணியில் சுணக்கம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

பொருள் : 2

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 2021–22 முதல் 2023–2024 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட 22.01.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ஒருவரும் செலுத்தவில்லை. ஏலம் நடைபெறவில்லை கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) | சென்றாண்டு/ மூன்றாண்டு சராசரி தொகையை விட அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை சுங்க வசூல் | திரு.ஆர்.ஜோசப், | 23,50,000 | **அதிகம்** |
| 2 | தினசரி காய்கறி மார்கெட் சுங்க வசூல் | திரு.ஆர்.ஜோசப், | 73,55,000 | **அதிகம்** |
| 3 | நகர பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (தென்கிழக்கு) சுங்க வசூல் | திரு.என்.சரவணன் | 15,30,000 | **குறைவு** |
| 4 | ஆடு அடிக்கும் தொட்டி சுங்க வசூல் | திரு.ப.சித்தன் | 6,80,000 | **அதிகம்** |
| 5 | மீன் மார்கெட் சுங்க வசூல் | திரு.ப.சித்தன் | 6,55,000 | **குறைவு** |
| | | திரு.எம்.கோவிந்தராஜ் | 6,75,000 | **அதிகம்** |
| 6 | நகர பேருந்து நிலைய மிதிவண்டி நிலையம் சுங்க வசூல் | திரு.கே.நஞ்சன் | 7,50,000 | **அதிகம்** |
| 7 | வர்த்தக தொலைக்காட்சி விளம்பரம் | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ள வில்லை** | | |
| 8 | வர்த்தக ஒலிபெருக்கி விளம்பரம் | திரு.பி.கே.செல்வம் | 1,20,000 | **குறைவு** |
| | | திரு.எம்.அசோக்குமார் | 1,31,100 | **அதிகம்** |
| 9 | புறநகர் பேருந்து நிலையம் பொருள் பாதுகாப்பு அறை உரிமம் | திரு.பி.மணி | 3,31,100 | **அதிகம்** |
| 10 | புறநகர் பேருந்து நிலையம் எடைபார்க்கும் இயந்திரம் (வடபுறம்) | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ள வில்லை** | | |
| 11 | புறநகர் பேருந்துநிலையம் எடைபார்க்கும் இயந்திரம் (தென்புறம்) | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ள வில்லை** | | |

| | | |
|---|---|---|
| 12 | இராஜகோபால் பூங்கா சுங்க வசூல் | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ள வில்லை** |

**அலுவலகக்குறிப்பு**

1. வரிசை எண்.1–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.ஆர்.ஜோசப் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரிசை எண்.2–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.ஆர்.ஜோசப் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரிசை எண்.3–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி சென்ற ஆண்டு தொகையை விட குறைவாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட குறைவாகவும் கோரப்பட்டுள்ளது. மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
4. வரிசை எண்.4–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.ப.சித்தன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
5. வரிசை எண்.5–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.கோவிந்தராஜ் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
6. வரிசை எண்.6–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.கே.நஞ்சன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
7. வரிசை எண்.7–ல் உள்ள இனத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் வரப்பெற வில்லை மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
8. வரிசை எண்.8–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.அசோக்குமார் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
9. வரிசை எண்.9–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.பி.மணி என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
10. வரிசை எண்.10–ல் உள்ள இனத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் வரப்பெற வில்லை மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
11. வரிசை எண்.11–ல் உள்ள இனத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் வரப்பெற வில்லை மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
12. வரிசை எண்.12–ல் உள்ள இனத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் வரப்பெற வில்லை மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
13. 2021–22 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2022–2023 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2023–2024 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் :3**

தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் திட்டப்பணிகள், பாதாள சாக்கடை பணிகள், குடிநீர் பணிகள், மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட பணிகள் ஆய்வுகள் மேற்கொள்ள பணி ஆய்வாளர் பணியிடம் சுமார் 2வருடங்களாக காலியாக உள்ளதால் பணிகளை தினசரி ஆய்வுகளை மேற்கொள்ளப்பட முடிவதில்லை. எனவே மேற்கண்ட பணிகளை தினசரி ஆய்வுகளை மேற்கொள்ளவும் தொடர்பான அனைத்து பணிகளை மேற்கொள்ளவும் பொறியாளர் பிரிவில் பணிகள் தோய்வின்றி நடைபெறவும் 2 எண்ணிக்கை தொழில்நுட்ப பணியாளர்களை ஒப்பந்ததரார்கள் மூலம் நியமனம் செய்துக்கொள்ளவும் அதற்காக ஏற்படும் செலவினத் **தொகை ரூ 4.87லட்சத்தினை பொது நிதியின்** கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2).தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் :4**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 1முதல் 17 வரை உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்காக (Operation and Maintenance of Street Lights including Routine Breakdown maintenance and preventive maintenance works from Ward 1 to Ward 17 and all centre median lights and all High Mast Lights in Dharmapuri Municipality Estimate mount 40,00,000.00) ஒப்பந்தப்புள்ளிகள் 24.12.2020 அன்று கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளியினை கூர்ந்தாய்வு குழு மூலம் பதிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அனுமதிக்கப்பட்ட தொழில்நுட்ப கூறுகளை பூர்த்தி செய்யாததால் non responsive bid என இறுதி செய்யப்பட்டது.

1). Saran Traders Contractors, Hosur.

2) Quality Engineering, Contractor, Dharmapuri

கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப கூறுகளை பூர்த்தி செய்வதால் Responsive Bid என இறுதி செய்யப்பட்டது.

1).M/S.Sanjai Traders O&M Contractors in Corporation and Municipality Street Lights Dharmapuri

மேற்கண்ட Responsive Bid என இறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கம் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | M/S.Sanjai Traders Dharmapuri | 3.62% மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு**

**1).**தலைமைபொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.**13899/2016**/DO1 நாள்.**24.01.2020** கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**2).** மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட M/S.Sanjai Traders Dharmapuri 3.62 % மதிப்பீட்டை விட குறைவு ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**3).**தெருவிளக்கு ஆண்டு பராமரிப்பு பணிக்கான செலவின தொகை ரூ**40.00**லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**4).** M/S.Sanjai Traders Dharmapuri அவர்களின் **27.01.2021** நாளிட்ட கடிதத்தின் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் :5**

தருமபுரி நகராட்சி வார்டு **23** அகமத்கான் கிராஸ் தெருவிற்கு புதியதா சிமெண்ட காங்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு **29.01.2021** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மனறத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு,சி.குட்டிமணி | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஜ.பயாஸ். | 0.13% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட திரு,சி.குட்டிமணி 0.02 % மதிப்பீட்டை விட குறைவு ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் :6**

தருமபுரி நகராட்சி பொறியாளர் பிரிவிற்கு இரண்ட எண்ணிக்கை தொழில்நுட்ப பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் பணிகளை மேற்கொள்ள 29.01.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மனறத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு,டி.எஸ்.ஜப்பார் | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஐ.பயாஸ். | 1.18% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட திரு, டி.எஸ்.ஜப்பார் 0.04 % மதிப்பீட்டை விட குறைவு ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் :7**

தருமபுரி நகராட்சி வார்டு 17 இரமாலிங்கசெட்டி தெரு மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் அமைந்துள்ள உள்ள நகராட்சி பொறியாளர் குடியிருப்புக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள 19.01.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மனறத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு,டி.எஸ்.ஜப்பார் | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஐ.பயாஸ். | 2.56% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட திரு,டி.எஸ்.ஜப்பார் 0.09 % மதிப்பீட்டை விட குறைவு ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் :8**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 புதுார் மாரியம்மன் தெரு பொருமாள் கோவில் தெரு சாலையிகளில் பாதாள சாக்கடை இணைப்புகள் வழுங்கயதால் சாலைகள் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் வாகன ஓட்டிகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட புதுார் மாரியம்மன் கோயில் தெரு சாலைக்கு புதியதாக சிமெண்ட சாலை அமைக்க வேண்டியிருப்பதால் அதற்காக ஏற்படும் செலவினத்தொகை ரூ9.50லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் :9**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 வெங்கட்ராமன் கோவில் தெரு சாலையிகளில் பாதாள சாக்கடை இணைப்புகள் வழுங்கயதால் சாலைகள் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் வாகன ஓட்டிகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட வெங்கட்ராமன் கோயில் தெரு சாலைக்கு புதியதாக சிமெண்ட சாலை அமைக்க வேண்டியிருப்பதால் அதற்காக ஏற்படும் செலவினத்தொகை ரூ**9.90**லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் :10**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான பொருட்கள் வாங்கி வழங்குவதற்கு நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.01.2021ம் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | திரு.**D.S.**ஜப்பார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை 1க்கு | | | | திரு.**J.**பயாஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை 1க்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | மொத்த தொகை | | எண்ணிக்கை | தொகை | மொத்த தொகை |
| | கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான பொருட்கள் | | | | | | | |
| 1. | முழு உடல் உறை | 300 Nos | 949.50 | 284850 | | 300 Nos | 951.00 | 285300 |
| | முக உறை | 25000 Nos | 9.90 | 247500 | | 25000 Nos | 10.50 | 262500 |
| | கையுறை | 3000 Nos | 50.00 | 150000 | | 3000 Nos | 52.00 | 156000 |
| | Total | | | 682350 | | | | 703800 |
| | GST 12% | | | 81882 | | | | 84456 |
| | **Grand Total** | | | **764232** | | | | **788256** |

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. டி.எஸ். ஜப்பார், நகராட்சி ஒப்பந்ததாரர் தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது நிதியில் மேற்கண்ட செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் :11

இந்நகராட்சிக்கு சொந்தமான நகர பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் (தென்கிழக்கு) கட்டணம் வசூல் செய்துகொள்வதற்கு2018–2019ம் ஆண்டு குத்தகைக்கு திரு.எம்.பாண்டு என்பவருக்கு விடப்பட்டது. குத்தகை காலம் 31.03.2021 அன்று முடிவுபெறும் நிலையில் குத்தகை நிலுவை தொகை ரூ.1929375 உள்ளது. குத்தகை தொகை அதிகமாக உள்ள காரணத்தாலும் கொரானா நோய் தொற்று காலமாக உள்ளதாலும் தனக்கு இழப்பு ஏற்படுவதால் மேற்படி இனத்தின் குத்தகையை 19.01.2021ம் தேதி முதல் நகராட்சிக்கு திரும்ப ஒப்படைப்பு செய்வதாக திரு.எம்.பாண்டு என்பவர் கடிதம் கொடுத்துள்ளார். நகர பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் (தென்கிழக்கு) குத்தகை இனம் 2020–2021ம் ஆண்டிற்கு பொது ஏலம்விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கடிதத்தினை தொடர்ந்து குத்தகைதாரரின் குத்தகையை ரத்து செய்யவும் நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டு மேற்படி குத்தகை இனத்தினை பொது ஏலம் விட்டு குத்தகைதாரருக்கு ஒப்படைக்கும் தேதி வரை துறைமூலம் வசூல் செய்யவும் குத்தகை நிபந்தனைபடி திரு.எம்.பாண்டு என்பவர் செலுத்தியுள்ள டேவனி தொகையை குத்தகை தொகைக்கு நேர்செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படும் பட்சத்தில் திரு.எம்.பாண்டு என்பவரின் முன்வைப்பு தொகை ரூ.873976/–ஐ பறிமுதல் செய்யவும் மீதித்தொகை ரூ.1055399/–ஐ அன்னார் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொண்டு இழப்பீடு தொகை வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்ததாரர் திரு.எம்.பாண்டு அவர்கள் நகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டதால் குத்தகைதாரர் நகராட்சியின் அறிவிப்பினை தொடர்ந்து தொகை செலுத்தாத பட்சத்தில் வருவாய் ஆய்வர்(பொ) பரிந்துரையின்படி கருப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி

**2021ஆம் வருடம்  ஜனவரி மாதம் 29.01.2021ம் நாள் வெள்ளிக் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல்  11 வரை | 1 முதல்   11 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.